www.tamilarangam.net




எமது உழைப்பினுல் உயிர்பெற்ற இந்த நிலம், எமது பரம்பரையின் இரத்தமும். சதையும் புதையுண்டு வளங்கொண்ட இந்த மண் நம்மால் ..... நமக்கே சொந்தமாக்கப்படல் வேண்டும். இதற்கு முன்னதாக இம்மண்ணில் நமது இருப்புக்கு அச்சுறுத்லாக இருக்கும் சக்திகளின் அச்சாணியை அறுத்து இம்மண்ணோடு ஆழப்பதிந்து போன நம் உறவை நிலே நிறுத்த எமது முயற்சிகள் இணேந்த கரங்களே இறுகப் பிணேத்து உச்ச வேகத்தோடு தொடரப்படல் வேண்டும் என்பதில் ஆங்காங்கு தொழிற் சங்க போட்டிகளால் சிதறுண்டு கிடக்கும் நாமனேவரும் நமக்குள் நாமே ஒருமித்து உறுதி பூண்டு கொள்வோம். மலேயகம் என்று அழைக்கப்படும் இந்த நிலத்தில் எமது உடமைகளும், நாமும் பாதுகாப்புடன் வாழத் தகுந்த சூழலே உருவாக்குவதே எமது எதிர்காலத்தை செழிப்புறச் செய்வதாய் அமையும்.

எனவே. இத்தனே காலமும் எம்மை நிர்மூலமாக்கும் வகையில் அமைந்த வேதனேயான நிகழ்வுகளேப் படிப்பினேயாக்கி எதிர் காலத்தில் எதிர்கொள்ள வேண்டிய தடைகளேயும் எதிர்த்து நிமிர்ந்து நின்று போராட எழுவோம்!!

---

நாம் ஈழவர் நமது மொழி தமிழ் நாம் நாடு ஈழம்

ஈழப் புரட்சி அமைப்பு EROS
EELAM REVOLUTIONARY ORGANISATION

15-11-1989 பிரான்சுக் கிளை

# நாடற்றவரல்ல...நாம் இந்நாட்டவரே!




## நாடற்றவர் அல்ல.....<br>நாம் இந்நாட்டவரே!

எங்களேத் தெரிகிறதா? முகங்கள் மறைக்கப்பட்டு அரசியல் அரங்கின் நுழைவாயிலிலேயே தடுத்து நிறுத்தப்பட்டுவிட்ட எங்களேத் தெரிகிறதா? நாற்பத்தோராண்டுகளாக நாடற்றவர் என்ற பட்டப்பெயர் சூட்டி தேயிலே, இறப்பர் தோட்டங்களுக்குள்ளே வாழ்க்கை என்னும் பெயரால் சிறையினுள் பூட்டப்பட்டிருந்த எங்களேத் தெரிகிறதா? இரண்டு நூற்றுண்டுகளுக்கு முன்பாக கால் நடையாக கண்டிச்சீமையை வந்தடைந்த மூதாதையரின் வாரிசுகள் தான் நாம் காடு மேடாகக் கிடந்த நிலப்பரப்பை பொன் கொழிக்கும் பூமியாகப் பூக்கச் செய்தவை எங்கள் கரங்கள். இந்த இன்ப பூமிக்கு விதையானவை எங்கள் இன்னுயிர்கள். மண்ணில் புதைந்த அத்தனே உடல்களும் தான் உரமாகிப் பயிர் வளர்த்தவை. சிந்தப்பட்ட இரத்தத் துளிகளாலும், வியர்வையாலும் தான் தேயிலே, இரப்பர், கோப்பி, கொக்கோ பயிர்கள் வளர்ந்தன.

மலேயக மக்களேப் புறக்கணித்து வைக்கும் எந்த உடன்பாட்டையும் ஏற்கமுடியாது.

-பாலகுமார்-

நாடற்றவரல்ல...நாம் இந்நாட்டவரே!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilagangam.net

# கடல் கடந்து வாழும் ஈழமக்களுக்கான

# "ஈழவர் குரல்"

# 4782 7030

# தொலைபேசிச் செய்திச் சேவை

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்